**பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (பகுதி -1) - 2021**

---

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (திட்டம் -1) 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 நவம்பர் 20 ஆம் திகதிய எஸ்ஆர்ஜ 47037 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

---

நிகழ்ச்சித்திட்டத்தின் வசதியளிப்பு நிர்வாக கைநூலின் பிரகாரம், மின்சக்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளடுதடன் இலங்கை மின்சார சபை நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தூய வலு உற்பத்தி, முறைமை வினைத்திறன் மற்றும் உண்மைத்தன்மையை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். நிகழ்ச்சித்திட்டதின் நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்யப்பட்ட நீர் மின்வலு உருவாக்கம், உபமின்நிலையத்திற்கு இணைக்கப்பட்டவை, உயர்த்தப்பட்ட பரிமாற்ற உட்கட்டமைப்பு இயலளவு, முனனேற்றப்பட்ட வினைத்திறனான நடுத்தர வோல்டேச் வலையமைப்பு முன்னேற்றப்பட்ட வினைத்திறனான மின்வலுவுக்கான பக்க முகாமைத்துவ கேள்வி மற்றும் வழங்கப்பட்ட இயலளவு அபிவிருத்தி ஆதரவு போன்ந ஐந்து கூறுகளின கீழ் நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் அமுலாக்கப்படுகின்றன. வசதியளிப்பு நிர்வாக கைநூலின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 28,509.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 220 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 23,326.20 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 180 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏஜென்ஸ் பிரன்சியஸ் டி அபிவிருத்தியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 5,183.60 மில்லியன் தொகை இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பாரர்க்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2015 பெப்ரவரி 02 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், நிகழ்ச்சிதிட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2024 யூலை வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல்,

அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 வரை மூலதனமாக்கப்பட்ட 51 வாகனங்கள் தொடர்பில் ரூபா 138.7 மில்லியன் தொகையான பெறுமானத்தேய்வு பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடுகளாக கணக்கிடுவதற்குப் பதிலாக இலங்கை மின்சார சபை மூலதன பங்களிப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 138.7 | செயற்திட்டத்தின் நிதிக் கூற்றில் இது தொடர்பில் புறம்பாக வெளிப்படுத்தல் செய்யப்பட்டிருந்தது. | பெறுமானத்தேய்விற்காக முறையான கணக்கீட்டு முறை பிரயோகிக்க வேண்டும். |
| (ஆ) | வாகனங்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலம் மீளாய்வாண்டில் 7 முதல் 14 வரை மாற்றமடைந்திருந்தது. எவ்வாறாயினும், செயற் திட்டத்தின் பகுதி 1 இன் 42 வாகனங்களில் 19 வாகனங்கள் தொடர்பான பெறுமானத்தேய்வு 7 ஆண்டுகள் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவால், மீளாய்வாண்றான பெறுமானத்தேய்வு ரூபா 16.6 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 16.6 | கவனத்திற்கொள்ளப் பட்டதுடன் தவறுகள் 2022 ஆண்டில் திருத்தப்பட்டிருந்தது. | பெறுமானத்தேய்வு கணிப்பீட்டிற்காக வாகனங்களின் புதிய பயன்பாட்டுக் காலம் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் பகுதி 2 இற்கு சொத்தமான 04 வாகனங்கள் பகுதி 1 இன் சொத்தாக கருதப்பட்டிருந்தது அதேநேரம், செயற்திட்டத்தின் அந்த பகுதிக்கு சொந்தமான 42 வாகனங்கள் | - | குறிப்பு 4.01 இலுள்ள தலைப்பிடல் பகுதி 01 ஆக தவறாக குறிப்பிடப் பட்டிருந்தது. உண்மையில் எழுத்துப் பிழைகாரணமாக மொறக்கொல்ல நீர் மின்பொறி செயற்திட்டம் திட்டம் 1 பகுதி 2 ஆக | நிதிக்கூற்றுக்களில் முறையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண’டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்திட்டதின் பகுதி 2 இன் சொத்தாக கருதப்பட்டிருந்தது. | | இருக்க வேண்டியதுடன் பகுதி 2 ஆக 4.2 இருக்க வேண்டும். பிழைகாரணமாக உயர்த்தப்பட்ட பரிமாற்ற உட்கட்டமைப்பு இயலளவு திட்டம் 1 பகுதி 1 ஆக இருக்க வேண்டும். எவ்வாறாயினும், மொறக்கொல்ல நீர் மின்பொறி செயற்திட்டம் (மேலதிக வெளிப்படுத்தல் குறிப்பு 2.1) சரியாக குறிப்பிடப்பட்டிருந்தன. | |
| (ஈ) | செயற்திட்டத்தின் பகுதி 3 ஆல் பயன்படுத்தப்பட்ட ரூபா 57.3 மில்லியன் பெறுமதியான ஐந்து வாகனங்கள் மற்றும் ரூபா 25.7 மில்லியன் பகுதி 2 ஆல் பயன்படுத்தப்பட்ட ஒரு வாகனம் 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இலங்கை மின்சார சபைக்கு கையளிக்கப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த வாகனங்கள் கணக்கேடுகள் இருந்து மாற்றாமல் செயற்திட்டத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது. | 83 | ஆசிய அபிவிருத்தி வங்கியால் வாகனங்கள் நிதியளிக்கப்பட்டதனால், கொடையாளர் நிதிகளின் பயன்படுத்தலை வெளிப்படுத்துவதற்கு செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களில் கட்டாயம் உள்ளடக்க வேண்டும். எவ்வாறாயினும், பகுதி 2 இன் வாகனங்கள் உரிய பிரிவிற்கு மாற்றப் பட்டுள்ளதுடன் செயற்திட்ட பிரிவின் பேரேட்டில் இருக்கவில்லை என்பதை குறிப்பிட மேலதிக வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளது. | முறையான கணக்கீட்டு முறை அல்லது உரிய தகவல்கள் பிரயோகிக்க வேண்டும். |
| (உ) | 2021 திசெம்பர் 31 வரை செயற்திட்ட செயற்பாடுகளிற்காக அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பேணப்பட்ட விசேட வெளிநாட்டு நாணய வங்கி கணக்கில் பெறப்பட்ட ரூபா 9.2 மில்லியன் தொகையான வட்டி நிதிக் கூற்றுக்களில் புறம்பாக காட்டுவதற்குப் பதிலாக | 9.2 | விசேட வெளிநாட்டு நாணய வங்கி கணக்கில் பெறப்பட்ட வட்டி கடன் பயன்படுத்தல் குறையும், முற்பண கட்டுநிதி வங்கிக் கணக்கில் வட்டி உட்பாய்ச்சல் செயற்திட்ட செலவினங்களின் கொடுப்பனவிற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. | முறையான கணக்கீட்டு முறை பிரயோகிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலங்கை மின்சார சபை மூலதன பங்களிப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | | |
| (ஊ) | மீளாய்வாண்டில் விசேட வெளிநாட்டு நாணய வங்கி கணக்கில் பெறப்பட்ட ரூபா 3.4 மில்லியன் தொகையான வட்டி LKAS 7 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் புறம்பாக காட்டப்பட்டிருக்கவில்லை. | 3.4 | விசேட வெளிநாட்டு நாணய வங்கி கணக்கில் பெறப்பட்ட வட்டி கடன் பயன்படுத்தலைக் குறைக்கும். முற்பணக் கட்டுநிதிக் கணக்கில் வட்டி உட்பாய்ச்சல் செயற்திட்ட செலவின கொடுப்பனவுகளிற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. | உரிய தகவல்களுடன் நியாயமான காசுப் பாய்ச்சல் கூற்று தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். |
| (எ) | செயற்திட்ட அமுலாக்கல் காலப்பகுதியின் போது அரசாங்கத்தால் ஏற்பப்பட்ட வட்டி, கடப்பர்டு கட்டணங்கள் பொன்ற பல்வேறு கடன்படல் கிரயங்கள் செயற்திட்டத்தின் நடைபெறும் வேலையின் ஒரு பகுதியாக அந்த செலவினங்கள் இருக்குமாயின் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - | இந்த குறித்த கடன் உடன்படிக்கை இலங்கை அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப் பட்டிருந்தது. ஆகவே, இந்த கடன் தொடர்பான கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் வட்டி நிதி அமைச்சால் செலுத்தப்பட்டுள்ளது. | உரிய தகவல்களுடன் நிதிக்கூற்றில் முறையான கணக்கீட்டு முறை அல்லது வெளிப்படுத்தல்கள் செய்தல் பிரயோகிக்க வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது 3146 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் பெறப்பட்ட ரூபா 4.2 மில்லியன் பெறுமதியான இரண்டு கடன் கைதவிர்ப்புகள் இலங்கை நிலைபேறான சக்தி அதிகார சபையால் பயன்படுத்தப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த கடன் கைதவிர்ப்புகள் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றில் பாதிக்கப்பட்டிருக்கவில்லை. | 4.2 | இலங்கை மின்சார சபைக்கு வெளியே வித்தியாசமான பதிவுகளால் கைதவிர்க்கப்பட்டுள்ளது, முறையாக கொடுக்கல் வாங்கல் முறை இல்லாமல் கணக்கீடு செய்ய முடியாதுள்ளது. | சொல்லப்பட்ட கைதவிர்ப்புகள் செயற்திட்டத்துடன் தொடர்புபட்டுள்ளதுடன் இதன்படி செயற்பட்டுள்ளதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஐ) | இலங்கை மின்சார சபை மற்றும் செயற்திட்டம் பெறுமானத் தேய்விற்கான | 21.7 | நடைபெறும் வேலை மீதி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைப் பொல முழு நிதிக் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீட்டில் நிலையான கணக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. ஆகவே, இலங்கை மின்சார சபையால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை மின்சார சபையின் கீழ் செயற்பட்ட செயற் திட்டங்களின் கணக்காய்வில் நம்பிக்கை கொள்ள முடியாதிருந்தது. இதன்படி, செயற்திட்ட சொத்துக்களின் நடைமுறை ஆண்டு பெறுமானத் தேய்விலிருந்து ரூபா 21.7 மில்லியன் தொகை கழிக்கப்பட்டிருந்தது. | ஒப்பிடும் போது பெறுமானத்தேய்வின் தாக்கம் முக்கியத்துவம் இல்லாதிருந்தமை நிலையாகவுள்ளதுடன் நாங்கள் முன்னைய கால வெளிப்படுத்தல்களை செய்திருக்கவில்லை. | கூற்றுக்களிற்குமாக ஒரே கணக்கீட்டுக் கொள்கை பிரயோகிக்க வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை மின்சார சபையின் உள்ளக பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை | கணக்காய்வுத் திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கி செயற்திட்டங்கள் உள்ளடங்கலாக சகவற்றினையும் மேவி விருத்தி செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கணக்காய்வு நடவடிக்கைகள் விரைவில் தொடங்கப்படும். | செயற்திட்டமானது வினைத்திறனான செயற்திட்ட நடவடிக்கைகளை உறுதி செய்வதற்கு உள்ளகக் கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்ய வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய PED03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | செயற்திட்டமானது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி (PAYE) மற்றும் வரி மீதான வரி கழிக்காமல் இதனை சொந்த நிதிகளில் 2020 ஒக்தோபர் வரை ரூபா 47.8 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இலங்கை மின்சார சபை 2020 ஒக்தோபர் வரையிலேயே உழைக்கும் பொதே செலுத்தும் வரி செலுத்தியிருந்தது. 2020 நவம்பரிலிருந்து APIT சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், ஊழியர்களால் செலுத்தப்பட்டது. | சபை தீர்மானங்கள் முறையாக அமுலாக்கப்பட வேண்டும். |
| (இ) | 2016 மார்ச் 23 ஆந் திகதிய 1/2016 ஆந் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை | ஏற்பாட்டிற்கு முரணாக 2021 திசெம்பர் 31 வரை ரூபா 96.3 மில்லியன் தொகையான விடுமுறை கொடுப்பனவு மற்றும் மிகையூதியம் செயற்திட்ட உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | இலங்கை மின்சார சபை கொள்கை மற்றும் வழிகாட்டல்களிற்கமைய சகல இலங்கை மின்சார சபை ஊழியர்களிற்கும் இது உள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்க வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| கூறு | நடவடிக்கைகள் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | முகாமைத்துவத்தின் பதில் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | அடையப்பட்ட செயலாற்றல் | | |
| | | சதவீதம் | சதவீதம் | | |
| பகுதி 01- அபிவிருத்தி செய்யப்பட்ட நீர் மின்சார உருவாக்கல் மற்றும் உப நிலையத்திற்கு இணைத்தல | (அ) மொறகொல்ல நீர் மின்சார பொறி நிர்மாணம்.<br>i. லொட் A1<br>ii. லொட் A2<br>iii. லொட் B<br>iv. லொட் 3<br>v. லொட் C | 100 | 70<br>23<br>10<br>69<br>100 | இந்த பொறி 2019 யூனில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென ஆரம்பத்தில் பட்யலிடப் பட்டதுடன் பின்னர் 2023 நவம்பர் வரை நீடிக்கப் பட்டிருந்தது. மேலும், பிரதான சிவில் வேலைகளிற்காக (லொட் | செயற்திட்டமானது பின்வரும் காரணங்களால் தாமதப்பட்டிருந்தது.<br>ஆலோசனை சேவைக்கான கொள்வனவில் தாமதம்.<br>லொட் A2 மற்றும் லொட் B இன் கொள்வனவில் தாமதம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (ஆ) 05 கிமீ, 132 கேவீ இணைந்த பரிமாற்ற உட்கட்டமைப்பின் நிர்மாணம் மற்றும் பொருத்துதல். | | | A2) ஒப்பந்தம் 2019 செப்தெம்பர் 04 இல் வழங்கப்பட்டது அதாவது பின்னர் ஆரம்ப பூர்த்தியாக்கல் திகதி பட்டியலிடப்பட்டது<br><br>லொட் A1 மற்றும் லொட் A2 மீதான ஆலோசனை சேவைகளிற்கான (லொட் 3) ஒப்பந்தம் 2016 ஒக்தோபர் 24 இல் வழங்கப்பட்ட போதிலும், லொட் A1 மற்றும் லொட் A2 இற்கான ஒப்பந்தம் முறையே 2018 மே மற்றும் 2019 ஒக்தொபரில் வழங்கப்பட்டிருந்தது.<br><br>சொல்லப்பட்ட வேலைப்பகுதி செயற்திட்டத்தின் நோக்கெல்லைக்குள் இருக்கவில்லை என்பது வெளிப்பட்டது. | கோவிட் 19 நோய் தொற்று. பிரயாணத் தடை,, குண்டு வெடிப்பிற்கான தாக்கங்கள், வெளிநாட்டவர்களிற்கு வீசா வழங்குவதில் தாமதம், நிர்மாண பொருட்களின் கப்பலேற்றல் கேள்வு கிடைக்காமை மற்றும் குறைவு. |
| பகுதி 02– உயர்த்தப்பட்ட பரிமாற்ற உட்கட்டமைப்பு இயலளவு | i. லொட் A<br>ii. லொட் B1<br>iii. லொட் B2 | 100<br>100<br>100 | 99.6<br>97.5<br>100 | ஆரம்பத்தில் சகல நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2019 யூன் மாதமாக இருந்த போதிலும் இது 2022 பெப்ரவரி நீடிக்கப்பட்டிருந்தது. | • ஈஸ்டர் ஞாயிறு தாக்கல்<br>• பாதகமான காலநிலை நிலைமை, உப ஒப்பந்தகாரரின் பிரச்சனைகள், நிரப்புதல் பொருட்களின் போக்குவரத்து மீது விதிக்கப்பட்ட பயணத் தடை<br>• கோவிட-19 நோய் தொற்று நிலமை காரணமாக ஒட்டு மொத்த தாமதம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பகுதி 03: முன்னேற்றப் பட்ட நடுத்தர வோல்டேச் வலைய மைப்பின் வினைத்திறன் | வவுணதீவு மற்றும் மாதம்பையை சுற்றி அண்ணளவாக 92 கிமீ, 33 கேவீ நடுத்தர வோல்டேச் வழி மற்றும் கன்ரீஸ் பொருத்துல் | 100 | 98.9 | 2020 பெப்ரவரி 25 ஆந் திகதிய 20.03.049 ஆம் இலக்க சபை தாள் பிரகாரம், செயற் திட்டத்தின் இந்த பகுதி பல சட்ட பிரச்சினைகளால் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மிகுதி வேலைகளை சபையின் விநியோகப் பிரிவு 02 இற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | காணி பெறுவதில் தாமதம். |
| பகுதி 04: முன்னேற்றப் பட்ட வினைத் திறனான எரிசக்திக்காக கேள்வி சார் முகாமைத்து வம் | அ) மீற்றரிடல் முன்னோடி செயற்திட்டம் | 100 | 100 | சுமாட் மீற்றரிடல் முன்னேடி செயற் திட்டத்தின் அமுலாக்கல் பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 11 மாதங்கள் கடந்த பின்னர் 2019 யூலை 29 பூர்த்தியாக்கப்பட்டிருந்தது மேலும், சுரங்க சேகரிப்பு முன்னோடி செயற்திட்டம் மற்றும் சுமாட் கட்டிட முன்னோடி செயற்திட்டம் என்பவற்றின் கீழான நிர்மாண வேலைகள் கேள்வி வழி முகாமைத்துவ செயற்திட்டங்களின் கருத்துரையால் சுற்றியுள்ள இடங்கள் எடுத்திருந்த வெளிவாரியான சுற்றாடல் மாற்றம் காரணமாக இரத்து செய்யப்பட்டிருந்தது. | - |
| | (ஆ) சுரங்க களஞ்சியப் படுத்தல் முன்னோடி செயற்திட்டம். | - | - | | |
| | (இ) நிலையான கட்டிட முன்னோடி செயற்திட்டம். | - | - | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பகுதி 05 – வழங்கப்பட்ட இயலளவு அபிவிருத்தி ஆதரவு | (அ) நிறுவன ரீதியான இயலளவுக்கான ஆலோசனை சேவை ஏற்பாடு | - | - | சொல்லப்பட்ட ஆலோசனை சேவை ஏற்பாடு தொடங்கப் பட்டிருக்கவில்லை. | - |
| | (ஆ) இரண்டாவது கட்டத்திற்கான புதிய செயற்திட்டதின் செயற்திட்ட முகாமைத்துவத் திற்காக ஆலோசனை சேவை ஏற்படு | 100 | 100 | | |

| | |
|---|---|
| முகாமைத்துவத்தின் பதில் | தாமதங்களிற்கான ஒரே காரணங்கள். |
| கணக்காய்வாளருடைய சிபார்சுகள் | பகுதி 01– எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதியில் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.<br><br>பகுதி 02 - எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதியில் செயற்பாட்டிலுள்ள செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுத்தல்.<br><br>பகுதி 03 - செயற்திட்டம் தொடங்குவதற்கு முன்னர் காணிகள் சுவீகரிக்க வேண்டும்.<br><br>பகுதி 04 - திட்டமிட்டவாறு செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாக்க வேண்டும்.<br><br>பகுதி 05 - செயற்திட்டம் தொடங்குவதற்கு முன்னர் அவசியமாக பகுதிகள் இனங்காண வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளருக்கு பதிலாக பல்வேறு பிரதேச தலைவர்களிற்கு ஒதுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைளிற்காக பொறுப்புடையவர்களால் செயற்திட்டத்தின் ஒருங்கிணைப்பு திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை. | பொதுவாக செயற்திட்ட பிரிவானது பிரதான உருவாக்கல் மற்றும் பரிமாற்ற செயற்திட்டங்கள் மாத்திரம் கையேற்றிருந்ததுடன் செயற்திட்ட நோக்கெல்லைக்குள் உள்ள ஏதாவது விநியோகம் தொடர்பான வேலைகள் உரிய விநியோகப் பிரிவால் மேற்கொள்ளப்படும். | திட்டமிட்டவாறு இருக்கின்ற செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்கும் நோக்கில் முறையான ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | ஆசிய அபிவிருத்தி வங்கி கடன்களின் (3146/3147) மூல முடிவுறுத்தல் திகதி202 மார் 31 ஆக உள்ளதுடன் இது 2021 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. இது மேலும் 2024 யூலை 13 வரை நீடிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், செயற்திட்ட நிர்வாக செலவினம் மற்றும் ஏனைய செலவினம் அதிகரிக்கக்கூடும் அத்துடன் கைதவிர்க்கப்படாத மீதிகளிற்காக அதிகமான கடப்பாட்டுக் கட்டணங்களை செலுத்த வேண்டியிருக்கும். | செயற்திட்டத்தின் பகுதி 01 ஐ நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்ட கால நீடிப்பே பிரதான காரணமாக உள்ளது. மேற்குறிப்பிட்டவற்றில் தாமதங்களிற்கான காரணங்களாக குறிப்பிடப்பட்டது. ஆரம்ப பூர்த்தியாக்கல் திகதியை பின்தள்ளி கால நீடிப்பு வழங்கப்பட்டமையால் மேலதிக செலவினம் ஏற்பட வேண்டியிருந்தமை உணரப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட திகதியளவில் இருக்கின்ற செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்ததியாக்குவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தின் பகுதி 2 இன் லொட் B இன் அளவீட்டுப் பட்டியலின் பிரகாரம், 3 வாகனங்களின் இறக்குமதி செய்யப்பட்ட மொத்த உள்ளபடியான CIF பெறுமதி ரூபா 8.9 மில்லியனிற்கு சமமான | 2016 மே இல் கைச்சாத்திடப்பட்ட லொட் B2 இன் ஒப்பந்த உடன்படின்கை பிரகாரம் ஆரம்ப கேள்வி விலை SCAPC இன் அனுமதியுடன் கேள்வி கோரும் நேரத்தில் தீர்மானித்திருந்ததுடன் | எதிர்காலத்தில் உள்ளபடியான கிரயத்தில் தேவையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்க |

| | | |
|---|---|---|
| ஐ.அ.டொலர் 58,446 ஆக இருந்த போதிலும் 3 வாகனங்கள் இறக்குமதி செய்வதற்காக ரூபா 24 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 158,065 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அளவீட்டுப் பட்டியலின் மொத்த தொகை ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இதன்படி, செயற்திட்டமானது வாகனங்களில் கொள்வனவில் ரூபா 15.1 மில்லியன் தொகையான சிக்கனமற்ற செலவினம் ஏற்பட்டிருந்தது. | உடன்பட்ட ஒப்பந்த விலையை செலுத்துவதற்கு CEB உடன்பட்டதுடன் வாகனங்கள் 2017 இல் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. CIF பிரகாரம், வாகனங்களின் விலை மற்றும் ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட விலை வித்தியாசமாக உள்ள போதிலும், CEB ஒப்பந்த உடன்படிக்கை கேள்வி விலைப் பிரகாரம் ஒப்பந்தகாரர் செலுத்துவதற்கு தவறியிருந்தார். | வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம் தொடர்புபட்ட விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் 55 வெற்றிடங்கள் நிலவியதுடன் அந்த வெற்றிடங்களில் 6 செயற்திட்டத்தின் செயலாற்றலை நேரடியாக பாதித்திருந்தது. | தேவையான உத்தியோகத்தர் எண்ணிக்கையை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவைப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |